10 செப்டம்பர் 2025 • புதன்

# தமிழ் முரசு

TAMIL MURASU
VOICE OF THE COMMUNITY

MDDI (P) 001/04/2025

தோற்றம்: 1935 நிறுவனர்: தமிழவேள் கோ.சாரங்கபாணி

சமூகத்தின் குரலாக, நூற்றாண்டை நோக்கி

sph media

**கணக்குகளில் குறைபாடு**

சுட்டிக்காட்டிய தலைமைக் கணக்காய்வாளர் அலுவலகம் 2



**பற்றி எரியும் நேப்பாளம்**

பதவி விலகிய பிரதமர், தொடரும் பதற்றநிலை 5



**தமன்னாவுக்குச் சிக்கல்**

தமிழில் நடிக்க ஆசை; அதிருப்திக் குரல்கள் எழுந்தன 8



# 14 வயது சிறுவனுக்கு கட்டுப்பாட்டு உத்தரவு

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் சிங்கப்பூரர்கள் இருவருக்குக் கட்டுப்பாட்டு உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டுள்ளன.

அவர்களில் ஒருவர் 14 வயதுச் சிறுவன்.

தீவிரவாதச் சித்தாந்தங்களைப் படித்த ஒரே ஆண்டிற்குள் அவர் ஐசிஸ் (ISIS) பயங்கரவாத அமைப்பையும் வலசாரி, இடசாரித் தீவிரவாதத்தையும் கம்யூனிசத்தையும் ஆதரிக்கத் தொடங்கினார். பெண்களையும் யூதர்களையும் அவர் வெறுத்தார்.

ஒசாமா பின் லாடன், ஹிட்லர், கிம் ஜோங் இல் ஆகியோரை அவர் முன்மாதிரியாகக் கொண்டார்.

வெளிநாட்டுத் தீவிரவாதிகள் சிலருடன் அவர் தொடர்பில் இருந்தார். சிங்கப்பூரில் தாக்குதல் நடத்த அவருக்கு உதவுவதாகக் கூறிய தீவிரவாதிகளில் ஒருவர், வெடிகுண்டுகளைத் தயாரிப்பதற்கான கையேடுகளையும் அனுப்பிவைத்தார்.

தாக்குதல் நடத்தச் சிறுவன் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை.

முஸ்லிமான அவர், முஸ்லிம்களுக்கு எதிரான கருத்துகளை நிராகரித்தார்.

சமூக ஊடகங்களில் ஐசிஸ் தொடர்பான தகவல்களை அதிக அளவில் படித்த அவர், பெரியவரானதும் அந்தக் குழுவினருக்காகப் போராடத் திட்டமிட்டிருந்தார்.

பள்ளித் தோழர்கள் சிலருடன் தீவிரவாதச் சித்தாந்தங்களை அவர் பகிர்ந்துகொண்டார். ஆனால் எவரும் தீவிரவாதப் போக்கிற்கு மாறவில்லை.

சிறுவன் தீவிரவாதப்போக்கிற்கு மாறியது பற்றி அவரின் குடும்பத்தாருக்குத் தெரியாது.

உள்நாட்டுப் பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்ட மற்றொருவர் 30 வயது ஆடவர்.

சிங்கப்பூரரான முஹம்மது ஜிஹாதுல் முஸ்ட்டாக்கிம் மஹ்முத் சுயதொழில் செய்பவர்.

சிரியாவிலும் கிரீசிலும் அவர் ஆயுதமேந்திப் போராட விரும்பினார்.

சிரியா பூசல் பற்றி 2011ல் தெரிந்துகொண்ட ஜிஹாதுல், அந்நாட்டில் ஆசாதின் ஆட்சிக்கு எதிராகப் போராட நினைத்தார்.

2019ல் அவர் வாழ்வில் தனிப்பட்ட பிரச்சினைகளை எதிர்நோக்கினார். அதே ஆண்டு சிரியாவின் கிளர்ச்சிக் குழுக்களில் சேர்ந்து போராடி, அர்த்தமுள்ள வகையில் மரணமடைய அவர் விரும்பினார்.

துருக்கியைத் தற்காக்கும் நோக்கத்துடன் கிரீசுக்கு எதிராக ஆயுதமெடுக்கவும் அவர் முடிவெடுத்தார்.

ஜிஹாதுல் அதற்காகக் காணொளிகளைப் பார்த்தார். இவ்வாண்டு பிப்ரவரி மாத விடுமுறையின்போது தாய்லாந்தின் புக்கெட் நகரில் துப்பாக்கிச் சூட்டுப் பயிற்சியில் அவர் ஈடுபட்டார். ஜிஹாதுலின் திட்டங்கள் பற்றி அவரின் குடும்பத்தார் அறிந்திருக்கவில்லை.

அவருக்கு ஜூலையில் கட்டுப்பாட்டு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

டான் டோக் செங் மருத்துவமனை

# புதிய மருத்துவக் கட்டடத்தில் கூடுதலாக 600 படுக்கைகள்

டான் டோக் செங் மருத்துவமனைக்குக் கூடுதலாக 600 படுக்கைகள் கிடைக்கவிருக்கின்றன. அதன் அவசரகாலச் சிகிச்சைப் பிரிவும் பெரிதாகவிருக்கிறது. முன்னைய இரண்டாம் தொற்றுநோய் நிர்வாக நிலையத்தையும் இரண்டாம் இணைப்புக் கட்டடத்தையும் புதிய மருத்துவக் கட்டடமாக உருமாற்றத் திட்டமிடுகிறது மருத்துவமனை.

தீவிர கவனிப்பு உடனடியாகத் தேவைப்படும் நோயாளிகளுக்கு உதவுவது நோக்கம். கடுமையான, சிக்கலான பிரச்சினைகளுடன் உயிருக்கு ஆபத்து ஏற்படக்கூடிய நிலையில் வரும் நோயாளிகளுக்கு உடனடி நிபுணத்துவச் சிகிச்சை வழங்கத் திட்டம் துணைபுரியும்.

நோயாளிகள் சிகிச்சைக்குக் காத்திருக்கும் நேரம் குறையும். அதனால் முதன்மை, உயர்நிலை, சமூகப் பராமரிப்புச் சேவைகளுக்கு இடையில் அவர்கள் எளிதாக மாறிக்கொள்ள முடியும்.

ஹெல்த்சிட்டி நொவீனா பெருந்திட்டத்தின் இரண்டாம் கட்டமாகப் புதிய மருத்துவக் கட்டடத்தின் மாதிரி வடிவம் நேற்று (செப்டம்பர் 9) வெளியிடப்பட்டது.





டான் டான் செங் மருத்துவமனையின் தலைமை நிர்வாக அதிகாரி டாங் கோங் சூங்கும் (இடம்) சுகாதார அமைச்சர் ஓங் யி காங்கும் (நடு) நேற்று (செப்டம்பர் 9) ஹெல்த்சிட்டி நொவீனா பெருந்திட்டத்தின் இரண்டாம் கட்ட மாதிரி வடிவத்தைப் பார்வையிட்டனர். **படம்: ஸ்ட்ரெய்ட்ஸ் டைம்ஸ்**

இரண்டாம் கட்டம் குறித்துப் பேசிய சுகாதார அமைச்சர் ஓங் யி காங், “சிங்கப்பூர் மக்கள் தொகை மூப்படையும் நிலையில் அதன் சுகாதாரப் பராமரிப்புத் தேவைகள் சிக்கலாகின்றன.

நெடுங்காலமாக இருக்கும் மருத்துவ நிலையங்களை மெருகூட்டுவது மட்டும் போதாது, பெரிய அளவில் புதுப்பிப்புப் பணிகளை மேற்கொள்ள வேண்டும். அவற்றின் சேவைகளை மறுஆய்வு செய்யவேண்டும்,” என்றார்.

முதற்கட்டத்தின் சாதனைகளுக்கு ஆதரவாகப் புதிய கட்டம் இயங்கும் என்றும் சமுதாயக் கொள்கைகளுக்கான ஒருங்கிணைப்பு அமைச்சருமான திரு ஓங் சொன்னார். முதற்கட்டத்தின் பணிகள் கடந்த ஆண்டு (2024) நிறைவுற்றன.

“இரண்டாம் கட்டத்தில் புதிய சுகாதாரப் பராமரிப்பு வசதிகள் அறிமுகம் காணும். வந்துபோகும் நோயாளிகளின் எண்ணிக்கையைச் சீராக வைத்திருக்கவும் செயல்முறைகளில் புத்தாக்கத்தைக் கொண்டுவரவும் நடவடிக்கைகள் எடுக்கப்படும்,” என்றார் திரு ஓங்.

டான் டோக் செங் மருத்துவமனை, என்எச்ஜி ஹெல்த் அமைப்பின்கீழ் செயல்படுகிறது.

சிங்கப்பூரின் மத்திய, வடபகுதிகளில் வசிப்போருக்குக் கூடுதல் மருத்துவ வசதிகள் கிடைக்கவும் தேவைப்படுவோருக்கு உடனடிச் சிகிச்சைகள் வழங்கவும் பெருந்திட்டத்தை அமைப்பு வகுத்துள்ளது.

அந்தத் திட்டத்தில் டான் டோக் செங் மருத்துவமனையின் புதிய கட்டடம் முக்கிய மைல்கல்லாகப் பார்க்கப்படுகிறது.

மக்களின் மாறுபட்ட தேவைகளுக்கு ஈடுகொடுக்கும் வகையில் என்எச்ஜி ஹெல்த் அமைப்பு படிப்படியாக அதன் உள்கட்டமைப்பை விரிவாக்குவதோடு வசதிகளையும் மேம்படுத்தி வருகிறது.

# இந்தியத் துணை அதிபராகிறார் தமிழகத்தைச் சேர்ந்த சி.பி. ராதாகிருஷ்ணன்

இந்தியாவின் 15வது துணை அதிபரைத் தேர்ந்தெடுக்க, செப்டம்பர் 9ஆம் தேதி தேர்தல் நடைபெற்றது.

தேர்தல் வாக்குப்பதிவு தொடங்கியதும் பிரதமர் நரேந்திர மோடி முதலில் வாக்களித்தார். பின்னர் நாடாளுமன்றத்தின் இரு அவைகளைச் சேர்ந்த உறுப்பினர்கள் அனைவரும் ஒருவர் பின் ஒருவராக வாக்களித்தனர்.

காலை 10 மணிக்குத் தொடங்கிய வாக்குப்பதிவு, மாலை 5 மணி வரை நடைபெற்றது. இதையடுத்து, உடனடியாக மாலை 6 மணியளவில் வாக்கு எண்ணிக்கை தொடங்கியது.

இம்முறை, ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி சார்பாக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணனும் இண்டியா கூட்டணி சார்பாக ஆந்திராவைச் சேர்ந்த உச்ச நீதிமன்ற முன்னாள் நீதிபதி சுதர்சன் ரெட்டியும் போட்டியிட்டனர்.

நாடாளுமன்றத்தின் இரு அவைகளையும் சேர்ந்த 781 உறுப்பினர்கள் வாக்களிக்கத் தகுதி பெற்றிருந்தனர். எனினும், ஒரு சுயேச்சை, பிஜு ஜனதா தளம் கட்சி உறுப்பினர்கள் தேர்தலைப் புறக்கணிப்பதாக அறிவித்திருந்தனர்.



இந்திய துணை அதிபர் தேர்தலில் வெற்றி பெற்ற ஆளும் தேசிய ஜனநாயகக் கூட்டணி வேட்பாளர் சி.பி. ராதாகிருஷ்ணன் (இடது) இந்தியப் பிரதமர் மோடியிடமிருந்து வாழ்த்து பெற்றார். **படம்: சி.பி. ராதாகிருஷ்ணன் எக்ஸ் தளம்**

எனவே, 768 வாக்குகள் மட்டுமே பதிவாகின.

மத்திய அமைச்சர்கள் நிதின் கட்காரி, ஜே.பி. நட்டா, அர்ஜுன் ராம் மேக்வால், பிரகலாத் ஜோஷி உள்ளிட்டோர் வாக்களித்தனர். நிதின் கட்காரியும் காங்கிரஸ் தலைவர் மல்லிகார்ஜுன கார்கேவும் நாடாளுமன்றத்திற்கு வந்தபோது கைகுலுக்கிக் கொண்டனர். முன்னாள் பிரதமரான தேவகவுடாவுக்கு தற்போது 92 வயதாகிறது. எனினும், சக்கர நாற்காலியில் வந்திருந்து, அவர் துணை அதிபர் தேர்தலில் வாக்களித்தார்.

வாக்கு எண்ணிக்கையின் முடிவில், சி.பி.ராதாகிருஷ்ணன் 452 வாக்குகள் பெற்று வெற்றி பெற்றிருப்பதாக அறிவிக்கப்பட்டது.

மற்றொரு வேட்பாளரான நீதிபதி சுதர்சன் ரெட்டிக்கு 300 வாக்குகள் மட்டுமே கிடைத்தன.

இதையடுத்து, புதிய இந்திய துணை அதிபராக தமிழகத்தைச் சேர்ந்த சி.பி.ராதாகிருஷ்ணன் விரைவில் பதவியேற்க உள்ளார். அவருக்குப் பிரதமர் மோடி, அதிபர் திரௌபதி முர்மு உள்ளிட்ட பலர் வாழ்த்து தெரிவித்துள்ளனர்.

8 887181 530005 >

60 காசு

தமிழ் முரசு சந்தாவுக்கு அழைக்கவும்: 6388-3838

# தக்சின் ஷினவாத் ஓராண்டு சிறையில் இருக்க வேண்டும்: தாய்லாந்து நீதிமன்றம் உத்தரவு

பேங்காக்: தாய்லாந்து உச்ச நீதிமன்றம் முன்னாள் பிரதமரும் பெருஞ்செல்வந்தருமான தக்சின் ஷினவாத் ஓராண்டு சிறையில் இருக்க வேண்டும் என்று தீர்ப்பளித்துள்ளது.

தாய்லாந்து அரசியல் களத்தில் கடந்த 20 ஆண்டுகளாக அசைக்கமுடியாத சக்தியாக விளங்கிய தக்சின் குடும்பத்திற்குத் தற்போது அடுத்தடுத்து அடி விழுந்துள்ளது.



தீர்ப்பு அறிவிக்கப்படும்போது திரு தக்சின் ஷினவாத்தும் அவரது மகள் பெடோங்டார்னும் நீதிமன்றத்தில் இருந்தனர். **படம்: புளூம்பர்க்**

தீர்ப்பு அறிவிக்கப்படும்போது தக்சின் நீதிமன்றத்தில் இருந்தார். அவரை விரைவில் காவல்துறையினர் தங்களது கட்டுப்பாட்டிற்குள் கொண்டுவருவார்கள் என்று கூறப்பட்டது.

சில நாள்களுக்கு முன்புதான் தக்சினின் மகள் பெடோங்டார்ன் ஷினவாத் தாய்லாந்துப் பிரதமர் பதவியிலிருந்து நீக்கப்பட்டது குறிப்பிடத்தக்கது. பெடோங்டார்ன், கம்போடியாவுடனான எல்லைப் பிரச்சினையில் நெறிமுறை தவறி நடந்துகொண்டதாகத் தாய்லாந்து நீதிமன்றம் தீர்ப்பு வழங்கி அவரைப் பதவியிலிருந்து நீக்கியது.

76 வயதான திரு தக்சின் 2001ஆம் ஆண்டு தாய்லாந்துப் பிரதமராகப் பொறுப்பேற்றார். அதன்பின்னர் 2005ஆம் ஆண்டு மீண்டும் பிரதமராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஆனால் ராணுவப் புரட்சியால் அவரது ஆட்சி கவிழ்க்கப்பட்டது.

2023ஆம் ஆண்டு நடந்த தேர்தலில் அவரது கட்சி பியூ தாய் வெற்றிபெற்றது. அதைத் தொடர்ந்து அவர் நாட்டுக்குள் மீண்டும் வந்தார். இருப்பினும் திரு தக்சின் அதிகாரத்தைத் தவறாகப் பயன்படுத்தியதற்காக அவருக்கு 8 ஆண்டு சிறைத் தண்டனை விதிக்கப்பட்டது. அதன்பின்னர் தாய்லாந்து மன்னர் அந்தத் தண்டனையை ஓராண்டாகக் குறைந்தார். தக்சின் மருத்துவக் காரணங்களால் சிறைக்குச் செல்லவில்லை. அவர் அதிநவீன வசதிகொண்ட மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டார்.

தக்சின் ஆறுமாத காலம் மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டார். அதன் பின்னர் அவர் வயது முதிர்ந்த கைதி என்ற கணக்கில் தண்டனைக் காலம் முடியும் முன்னரே வெளிவந்தார். தக்சினின் கட்சி அவருக்கு ஆதரவாக நடந்துகொண்டு சிறைத் தண்டனையை ஏமாற்றுவதாகக் குரல் எழுந்தது. மேலும் மருத்துவமனையில் தடுத்து வைக்கப்பட்டது சிறைத் தண்டனை இல்லை என்றும் கூறப்பட்டது.

அதைத்தொடர்ந்து தக்சின் மீது விசாரணை நடத்தப்பட்டுத் தீர்ப்பு வழங்கப்பட்டுள்ளது.